பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
17 08-2025 SUNDAY 6.30 PM

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மக்களுக்கு இரட்டை பலன்களை அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தேர்தல் ஆணையத்தின் மீது எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தேர்தல் ஆணையம் எவ்வித பாரபட்சமும் இன்றி செயல்பட்டு வருவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு Gyanesh Kumar தெரிவித்துள்ளார்.

4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. 20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Vishal அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்

<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் நாட்டு மக்களுக்கு இரட்டை பலன்களை அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இரண்டு அதிவிரைவுச் சாலைகளை மக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த சீர்திருத்த நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு மாநில அரசுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தீபாவளி பண்டிகைக்கு முன்பாக இது செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

மக்களின் நலனை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதன் அடிப்படையிலேயே கொள்கைகள் வகுக்கப்பட்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வேளாண் திட்டங்களின் பலன்கள் அனைத்து விவசாயிகளையும் சென்றடைவதை மத்திய அரசு உறுதி செய்யும் என்று வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

தேர்தல் ஆணையத்தின் மீது எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(Sound byte – எல். முருகன் – 42 Sec.)*

<<<<<<>>>>>

தேர்தல் ஆணையம் எவ்வித பாரபட்சமும் இன்றி செயல்பட்டு வருவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு *Gyanesh Kumar* கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் ஆணையத்தை பொறுத்தவரை ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லை என்றும் தெளிவுபடுத்தினார்.

அனைத்துக்கட்சிகளையும் தேர்தல் ஆணையம் சமமாக நடத்துவதாகவும் அவர் கூறினார்.

சட்டப்படி தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்த கட்சிகளிடையே எவ்வாறு பாகுபாடு காட்ட முடியும் என்றும் அவர் வினவினார்.

தேர்தல் ஆணையம் அனைத்துப்பணிகளையும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொண்டு வருவதாகவும் திரு *Gyanesh Kumar* தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தருமபுரி மொரப்பூர் ரயில் பாதை திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் விரைவில் நிறைவடையும் என்று மாநில அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்திட்டத்திற்காக நிலம் கையப்படுத்தும் பணிகள் 60 சதவீதம் நிறைவடைந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன்- 60 Sec. )*

இதற்கிடையே, காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்படும் உபரிநீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – தண்டபாணி - 48 Sec. )*

<<<<<<>>>>>>

பாரம்பரிய விதைத்திருவிழா பெரம்பலூரில் இன்று நடைபெற்றது.

இதில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – செல்வராஜ் – 44 Sec.)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் போட்டித்தேர்வுகளில் வெற்றிபெறுவது குறித்த இலவச கருத்தரங்கை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் இன்று தொடங்கிவைத்தார்.

------------

திருவாரூர் மாவட்டம் எடமேலையூரில் குறுங்காடு அமைக்கும் பணிகளுக்காக 2 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

------------

தொடர் விடுமுறையையொட்டி ராமேஸ்வரத்தில் சுற்றுலாப்பயணிகள் குவிந்துள்ளனர்.

----------------

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக கோவை குற்றாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து, அங்குள்ள சூழல் சுற்றுலாத்தலம் மூடப்பட்டுள்ளதாக வனத்துறை அறிவித்துள்ளது.

---------------

*மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு 22 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>*

***விளையாட்டுச் செய்திகள்***

*20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Vishal அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*பல்கேரியாவின் Samokov-வில் இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆடவர் 97 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், ஜப்பானின் Noah Leibowitz -ஐ வென்றார்.*

*------------*

*மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Devika Sihag தங்கப்பதக்கம் வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில அவர், இந்தியாவின் Isharani Baruah -ஐ வென்று இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*இதன்மூலம் Isharani Baruah-க்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.*

*இந்தியாவின் Tasnim Mir வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*---------------*

*ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற Bega ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Anahat Singh வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*------------*

*சீனாவில் நடைபெற்ற ஆசிய படகு சாம்பியன் போட்டியின் மகளிர் குழு பிரிவில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.*

------------

*ஆஸ்திரேலிய ஓபன் Teakwando போட்டியில் இந்தியாவின் Rupa Bayor வெண்கலப்பதக்கம் வென்றார்.*

-------------

*பெல்ஜியத்தில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Tejas Shirse வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

------

*17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான 23 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இப்போட்டி பூட்டானின் திம்புவில் வரும் 20-ஆம் தேதி தொடங்கி, 31-ஆம் தெதிவரை நடைபெறவுள்ளது.*

*இந்தியா, பூட்டான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் அணிகள் இதில் பங்கேற்கின்றன.*

*<<<<<END>>>>>*